[19th March 1963

(இ) மேற்படி தொகையிலிருந்து கரும்பு ஆலைக்கு ரோடுகள் போட செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ரூ. 28,81,498.34 ந. பை.

(இ) ரூ. 7,83,326·41 ந.பை.

(a) Rs. 28,81,498·34 nP.

(b) Rs. 7,83,326·41 nP.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அரசாங்கம் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களில் ஏதோ தவறு இருக்கிறது என்று கருதுகிறேன். ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் டன்கள் கரும்பு ஆடப்படுகிறது. டன் ஒன்றுக்கு 2 ரூபாய் வைத்தால்கூட அதிகமான தொகை வரும். ஆதலால் இந்தப் புள்ளிவிவரத்தில் ஏதாவது தவறுதல் இருக்கிறதா என்பதை முதலில் அறிய விரும்புகிறேன். இரண்டாவதாக, அந்தக் கரும்பு ஆலைகளில் ரோடு மேற்கொள்ளும் வேலை கரும்பு அபிவிருத்தி திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா? அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டால் எப்பொழுது அது முடிக்கப் படும்?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள் புள்ளி விவரத்தை நன்றாக ஆராய்ந்து கேள்வி போடுவார்கள் என்று நினைக்கிறேன். அரசாங்கத்திற்கு வந்துள்ள புள்ளிவிவரங்கள் நல்ல முறையில் பரிசீலனை செய்யப்பட்ட பிறகு தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதுவும் இந்த மன்றத்திற்குக் கொடுக்கப்படும் புள்ளிவிவரங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டுத் தான் கொடுக் கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது கொடுக்கப்பட்ட புள்ளிவிவரம் சரி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்க நிலம் (ஒதுக்குதல்)

*290 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மீனம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள பின்னி இன்ஜினீரிங் வொர்க்ஸிற்கு, ஒதுக்கப்பெற்ற அரசாங்க நிலம் எவ்வளவு?

(இ) இதற்கான பெறுமான தொகையாக அரசாங்கம் பெற்றது எவ்வளவு?

(உ) இவ்வளவு பரப்புடைய நிலம் ஒதுக்க, மத்திய அரசாங் கத்தினிடமிருந்து ஏதும் கடிதம் வந்து ஒதுக்கப்பெற்றதா?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) An extent of 1·91 acres has been leased to the company by this Government subject to the payment of an annual rent of Rs. 635 and premium of Rs. 12,700.

(c) No.

19th March 1963]

திரு. முனு. ஆதி : இதே போன்று இன்னும் பரந்து கிடக்கின்ற இடங்களில் மற்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு மனு ஏதாவது வந்திருக்கிறதா ? அரசாங்கத்திற்கு அதை உடனே கவனிக்கிற எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன். இதே போன்று மற்ற கேள்விகளையும் கேட்டால் அதையும் பரிசீலனை செய்து பதில் சொல்ல முடியும்.

ஏரலில் கைதானோர் (திருநெல்வேலி மாவட்டம்)

*291 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தாலுகா ஏரலில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் தேதி மாலை நூற்றுக் கணக்கானோர் ஏரல் போலீஸாரால் கைது செய்யப்பட்டது உண்மையா ?

(இ) அப்படியானால், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) "No," Sir.

(*b*) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரெஸ்டு செய்யப்படாவிட்டாலும் கூட ஏறக்குறைய 140 பேர்கள் நியூஸன்ஸ் சார்ஜ் செய்யப்பட்டு, இரண்டு தினங்களுக்குப் பிறகு ஸ்ரீவைகுண்டம் கோர்ட்டில் 2 ரூபாய் அபராத தண்டனை விதிக்கப்பட்டு, அதை அனுபவித்திருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நியூஸன்ஸ் மற்ற எத்தனையோ குற்றங்கள் செய்ததாக கருதப்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. என்ன புள்ளி விவரங்கள் வேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் கோருகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சங்கராந்திக்கு முந்தின தினத்தன்று மாலையிலே பெஜாரில் இருந்தவர்களில் சாமான்கள் வாங்குகையில் சத்தமாக இருந்தது என்ற காரணத்திற்காக 140 பேர்கள் அரஸெ்டு செய்யப்பட்ட தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சங்கராந்திக்கு முந்தின நாள் 140 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவல் கனம் அங்கத்தினருக்கு எங்கிருந்து கிடைத்தது என்று தெரியவில்லை. 13—1—1963 தேதியன்று 2 பேர்கள் ஐ.பி.ஸி. 279 செக்ஷன்படி (driving or riding on a public way so rashly on negligently as to endanger human life). அல்ரஸ்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். 15—1—1963 அன்று சார்ஜ் செய்ரிப்பட்டார்கள் இப்பொழுது கேஸ் நடக்கிறது.